

# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி
# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

**முகக் கவசம், உயிர்கவசம்**

**இன்று பிலவ ஆண்டு, மாசி மாதம் 17ஆம் நாள்**

**2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 01 ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**அதிகாரம் : வாழ்க்கைத் துணைநலம் - குறள் எண் : 57**

### குறள்

சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.

### குறள் விளக்கம்

தம்மைத் தாமே காத்துக்கொண்டு சிறந்த பண்புடன் வாழும் மகளிரை அடிமைகளாக நடத்த எண்ணுவது அறியாமையாகும்.

பழமொழி ( Proverb )

***A sound mind in a sound body***

**உடல் வலுவுற்றால் உள்ளமும் வலுவுறும்.**

பொன்மொழி

விழுவதெல்லாம் , எழுவதற்குதானே தவிர அழுவதற்கில்லை.

இரண்டொழுக்க உறுதி மொழி

1. மனித நேயமே உலகில் மகத்தானது. அனைவரிடத்திலும் அன்பு காட்டுவேன்.
2. கல்வி கற்பதே என் தலையாய கடமை. கடமையை என் கண்ணாய் கருதுவேன்

இன்றைய பொது அறிவு வினா விடை

1. வண்ணப்படம் எடுக்கும் முறையை கண்டுபிடித்தவர்? கேப்ரி யேல் லிப்மன்
2. இயந்திரத் துப்பாக்கியை கண்டுபிடித்தவர்? ஜேம்ஸ் பக்கிள்

### தினமும் ஆங்கிலம் கற்றுக் கொள்வோம்

Do you have any questions? உங்களிடம் ஏதாவது வினாக்கள் இருக்கிறதா ?

Who knows the answer? யாருக்கு விடை தெரியும் ?



# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி
# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

வரலாற்றில் இன்று :

- தென்கொரியா விடுதலை தினம்
- திமுக தலைவர் ஸ்டாலின் பிறந்த தினம்(1953)
- தமிழ் திரைப்பட நடிகர் எம்.கே.தியாகராஜ பாகவதர் பிறந்த தினம்(1910)
- ஸ்பெயினில் யூரோ நாணயம் அறிமுகப்படுத்தப்பட்டது(2002)

### இன்றைய செய்திகள்

- உக்ரைன்—ரஷ்யா போர் 5ஆவது நாளாக நீடிப்பு
- போர் ஒருபுறம் நடைபெற்று கொண்டிருக்கும் வேளையில், அமைதி பேச்சுவார்த்தையும் நடைபெற்று வருகிறது.
- ஐ.நா.சபை பொதுக்குழு இன்று கூடி போரைப் பற்றி விவாதிக்கிறது.
- உக்ரைன் நாட்டில் பயின்று வரும் மாணவர்கள் படிப்படியாக மீட்கப்பட்டு இந்திய அழைத்து வரப்படுகின்றனர். இதுவரை 1156 மாணவர்கள் இந்திய மாணவர்கள் அழைத்துவரப்பட்டுள்ளனர்.
- இன்று மஹாசிவராத்திரியை முன்னிட்டு அனைத்து கோவில்களிலும் கூட்டம் அலைமோதுகிறது.
- மணிப்பூர் மாநிலத்தில் மொத்தம் 60 தொகுதிகள் உள்ள நிலையில், அதில் 5 மாவட்டங்களில் 38 தொகுதிகளுக்கு நேற்று முதற்கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற்றது.
- மு.க ஸ்டாலின் எழுதிய உங்களில் ஒருவன் புத்தக வெளியீட்டு விழாவில் பேசிய ராகுல்காந்தி, 3,000 ஆண்டுகளாக தொடர்ந்து தமிழ்நாட்டின் மீது எதனையும் திணிக்க முடியாது என்று ஆவேசமாக பேசினார்.